**உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,**

ந.க.எண். 1082/2020 நாமா                                                  நாள். .03.2021.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு – நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – காதப்பள்ளி ஊராட்சி/கிராமம்– சர்வே எண்.33/2Part–ல் 2.00 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள **SPM** நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.01.07.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் திரு.ஆர்.மாணிக்கம், திருச்செங்கோடு அவர்களின் ஆன்லைன் எண். DTCP/P/0558902/2017, நாள்.30.10.2018 மற்றும் மனுதாரர். திருமதி.எஸ்.மாலதி, திருச்செங்கோடு அவர்களின் ஆன்லைன் எண். DTCP/P/0965252/2017 விண்ணப்பம் நாள். 26.02.2021, 08.12.2020 மற்றும் 26.03.2021.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.15.03.2021.

**********

உத்தரவு:

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், காதப்பள்ளி ஊராட்சி/கிராமம், சர்வே எண்.33/2Part–ல் 2.00 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள **SPM** நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(வரன்முறை)/நாமா எண்.12/2021 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 2.00 ஏக்கர் அல்லது 87120.00 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : 21087.12 ச.அடி |
| மொத்த மனைகள் | : 46 எண்ணம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 3 எண்ணம் |

| | | |
|---|---|---|
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 17,18 மற்றும் 35. |
| விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | **3900.00 ச.அடி** |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 43 எண்ணம் |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 1-4,12-16,19-34,36-47. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 62132.88 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு<br>பூங்கா-I (மனை எண்.7–11)<br>பூங்கா-II (மனை எண்.5)<br>பூங்கா-III (மனை எண்.OHT) | : | **6246.00 ச.அடி** |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் 46 மனைகளுக்கு ரூ.23,000/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

3) வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை **1, 2, 3, 4** மற்றும் **5**–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்னைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

20/3/24

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

30/3/24 30-3-24

**பெறுநர்,**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

| 1 புத்தகம் 2021ம் வருடத்திய 2473ம் ஆவணம் |
|---|
| 29 தாள்களைக் கொண்டது. |
| 17 வது தாள் பதிவு அலுவலர் |

**நகல்**

1. தலைவர்,
காதப்பள்ளி ஊராட்சி,
நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

2. திருமதி.எஸ்.மாலதி,
கதவு எண்.5/16, சுண்டமேடு,
சிறுமொளசி அஞ்சல்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

| | |
|---|---|
| 3. சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு. |
| 4. உதவி இயக்குநர் (நில அளவை), நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு. |

5. இருப்புக் கோப்பு

1 ... 2021 ... 2473ம் ஆவணம்
29 தாள்களைக் கொண்டது.
18 வது தாள
பதிவு அலுவலர்

M.B

**நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலரின்(கி.ஊ) அவர்களின்**
**நடவடிக்கைகள்**
**பிறப்பிப்பவர். திரு.டி.ஏ.சரவணன்,**

ந.க.எண்.தி4/1633/2021

நாள்.20.04.2021

பொருள் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்-2017 - நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அலுவலகம் -நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம் - நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் - காதப்பள்ளி ஊராட்சி/கிராமம் சர்வே எண்.33/2Part-ல் 2.00 ஏக்கர் (அ) 87120.00 ச.அ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள"SPM நகர் " என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை கொள்கை அளவில் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் ஆணை வரப்பெற்றது மனைப்பிரிவில் உள்ள விற்கப்படாத 37 மனைகளை உள்ளாட்சி அளவில் வரன்முறைப்படுத்துதல் - தொடர்பாக

பார்வை
1. அரசாணை(நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ 4(3), நாள்.04.05.2017.
2. அரசாணை(நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ 4(3), நாள்.13.10.2017
3. திருமதி.எஸ்.மாலதி, 5/16, சுண்டமேடு, சிறுமொளசி அஞ்சல், திருச்செங்கோடு என்பவரின் ஆன்லைன் விண்ணப்பம் எண்.DTCP/P/0558902/2017, நாள். 30.10.2018
4. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.1082/2020 நாமா, நாள்.30.03.2021.
5. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), நாமக்கல் வட்டாரம் அவர்களின் நேரடி தல ஆய்வு மற்றும் அறிவுரை நாள்.19.04.2021.

.....

<u>உத்தரவு :</u>

பார்வை(1) மற்றும் (2)-ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 3இல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் வாயிலாக நாமக்கல் வட்டாரம், காதப்பள்ளி ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 33/2Part-ல் 2.00 ஏக்கர் (அ) 87120.00 ச.அ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள"SPM நகர் " என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 46 மனைகளுள் விற்பனை செய்யப்படாத 43 வீட்டு மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கிட கோரி பரிசீலனைக்கட்டணம் ரூ.22500/-ஐ ஏற்கனவே இணையதளம் வாயிலாக செலுத்தி நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். பார்வை 3ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் ஏற்கப்பட்டு பார்வை 4-ல் காணும் கடிதம் மூலம் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒரு சில நிபந்தனைகளின்படி மேற்குறிப்பிட்ட அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி (In Principal approval of Layout Frame work ) ம.வ(வரன்முறை)/நாமா எண்.12/2021 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட 46 மனைகளில் 17,18,35 ஆகிய 03 மனையிடங்கள் மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் முன்னரே விற்பனை செய்யப்பட்டுள்ளதாக <u>பார்வை 4ல் காணும் கடிதத்தில்</u> தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 2021 ஆம் ஆண்டு 2473ம் ஆவணம்
29 ... கொண்டது.
19 பதிவு அலுவலர்

(த.பி.பா)

மேற்படி 03 மனைகள் வேறு ஆவண பதிவு வாயிலாக விற்பனை செய்ததன் மூலம் நில உடமை (Title of ownership) மாறிவிடுவதால் மேற்கண்ட மனையிடத்தை வாங்கியவர் தனியே விண்ணப்பித்து முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உதவி இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி, ஆவண பதிவு எண் 1272/2021, நாள்.24.03.2021 - ன்படி பூங்காவிற்காக 6246 சதுரடியும் சாலைகளுக்காக 21087.25சதுரடியும் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் பெயரில் தான பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது மனைதாரர் விற்கப்படாத 43 மனைகளில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட மனை எண்கள்.5, 7-11 ஆகிய 6 மனைகள் போக மீதம் உள்ள பின்வரும் 37 மனைகளை உள்ளாட்சி அளவில் வரன்முறைப்படுத்தி தருமாறு கோரியுள்ளார். கீழ்கண்ட விபரப்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | தொகை செலுத்தப்பட்ட இனம் | வங்கி விபரம் | ரசீது/நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பதிவுக்கட்டணம் | ஆன்லைன் வாயிலாக (பதிவு எண். DTCP/L/0965252/2017) | 26.02.2021 | 22,500/- |
| 2 | வளர்ச்சிக்கட்டணம் (ச.மீ-க்கு ரூ.25/- வீதம்) | Layout approval Development Charge – Khadapalli Panchayat | 9701,9702, 9703/ 19.04.2021 | 1,30,850/- |
| 3 | வரன்முறைக் கட்டணம்(ச.மீ-க்கு ரூ.45/- வீதம்) | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,நாமக்கல்(மாவட்ட கருவூலம், நாமக்கல்) | 16.04.2021 | 2,35,530/- |

வரன்முறை படுத்தப்படும் மனை விபரம்

| வ. எண் | கிராம ஊராட்சி | மனையின் பெயர் | சர்வே எண் | மனை எண் | விஸ்தீரணம் ச.அடி | விஸ்தீரணம் ச.மீட்டர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | காதப்பள்ளி | SPM நகர் | 33/2Part | 1 | 1507 | 140.00 |
| 2 | | | | 2 | 1490 | 138.42 |
| 3 | | | | 3 | 1464 | 136.00 |
| 4 | | | | 4 | 1397 | 129.78 |
| 5 | | | | 12 | 1965 | 182.55 |
| 6 | | | | 13 | 1200 | 111.48 |
| 7 | | | | 14 | 1200 | 111.48 |
| 8 | | | | 15 | 1200 | 111.48 |
| 9 | | | | 16 | 1200 | 111.48 |
| 10 | | | | 19 | 1200 | 111.48 |
| 11 | | | | 20 | 1200 | 111.48 |
| 12 | | | | 21 | 1200 | 111.48 |
| 13 | | | | 22 | 1200 | 111.48 |
| 14 | | | | 23 | 1200 | 111.48 |
| 15 | | | | 24 | 1200 | 111.48 |

1 ... 2021 ... 2473ம் ஆவணம்
29 ...
20 ...
பதிவு அலுவலர்

47

| வ. எண் | கிராம ஊராட்சி/ | மனையின் பெயர் | சர்வே எண் | மனை எண் | விஸ்தீரணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ச.அடி | ச.மீட்டர் |
| 16 | | | | 25 | 1200 | 111.48 |
| 17 | | | | 26 | 1200 | 111.48 |
| 18 | | | | 27 | 1200 | 111.48 |
| 19 | | | | 28 | 1200 | 111.48 |
| 20 | | | | 29 | 1200 | 111.48 |
| 21 | | | | 30 | 1200 | 111.48 |
| 22 | | | | 31 | 1260 | 117.05 |
| 23 | | | | 32 | 1569 | 145.76 |
| 24 | | | | 33 | 1500 | 139.35 |
| 25 | | | | 34 | 1500 | 139.35 |
| 26 | காதப்பள்ளி | SPM நகர் | 33/2Part | 36 | 1800 | 167.22 |
| 27 | | | | 37 | 1800 | 167.22 |
| 28 | | | | 38 | 1800 | 167.22 |
| 29 | | | | 39 | 1800 | 167.22 |
| 30 | | | | 40 | 1800 | 167.22 |
| 31 | | | | 41 | 2880 | 267.55 |
| 32 | | | | 42 | 2737 | 254.27 |
| 33 | | | | 43 | 2554 | 237.27 |
| 34 | | | | 44 | 2235 | 207.63 |
| 35 | | | | 45 | 1819 | 168.98 |
| 36 | | | | 46 | 1342 | 124.67 |
| 37 | | | | 47 | 919 | 85.37 |
| மொத்தம் | | | | | 56338.00 | 5233.78 |

கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்காணும் 37 மனைகளை இறுதிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பூங்கா/திறவிடத்திற்காக 10% பரப்பளவு இடம் மற்றும் மனைப்பிரிவு சாலைகளுக்காக தானமாக உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலத்தில் பிற்காலத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
3. வரன்முறை செய்து வழங்கப்படும் இம்மனைப் பிரிவுகளை வீடுகள் கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

1 புத்தகம் 2021ம் வருடத்திய 2473ம் ஆவணம்
29 தாள்களைக் கொண்டது.
21 வது தாள்
பதிவு அலுவலர்

5. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திரப்பதிவு செய்யும் போது. மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரப்பதிவு செய்திட வேண்டும்.

6. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் எதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்

7. பத்திரப்பதிவுகள் மற்றும் நில உடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்

8. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த/சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.

9. நில உரிமம் குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட உள்ளாட்சி அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

10. மனை உரிமையாளர்கள் அனைத்து கழிவு நீர்களையும் சொந்த இடத்தில் உறிஞ்சி குழி மூலம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கழிவு நீரை சாலையில் விடக்கூடாது.

**மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

**வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**நாமக்கல் வட்டாரம்.**

20/4/21

<u>பெறுநர்</u>

திருமதி.எஸ்.மாலதி,
5/16, கண்டமேடு,
சிறுமொளசி அஞ்சல்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

<u>நகல்</u>

1. நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், சேலம் மண்டலம், 6 சன்னதிதெரு, சுப்பிரமணிய நகர், சூரமங்கலம், சேலம்-636005.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.
3. சார்பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம் (இணை-1), நாமக்கல்.
4. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), நாமக்கல் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. ஊராட்சி மன்றத்தலைவர், காதப்பள்ளி ஊராட்சி (இருப்புக் கோப்பிற்கு)

1 புத்தகம் 2021ம் வருடத்தில் 2473ம் ஆவணம்
29 தாள்களைக் கொண்டது.
பதிவு அலுவலர்
22 வது தாள